தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின்
செயல்முறைகள் சென்னை-6

**ந.க.எண்.032782 / சி3 / இ1 / 2026 நாள்.08.06.2026**

**ந.க.எண். 009324 / டி1 / 2026 நாள்.08.06.2026**

பொருள்:- பள்ளிக் கல்வி – 2026-27ம் ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு – நடத்துதல் – விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பங்களை கல்வி தகவல் மேலாண்மை முகமையில் (EMIS) இணையத்தில் பதிவேற்றம் செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை:- 1)அரசாணை (நிலை)எண்.176 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.12.2021
2)அரசாணை (நிலை)எண்.180 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.17.10.2022
3)அரசாணை (நிலை)எண்.94, பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.24.5.2023
4) அரசாணை (நிலை) எண். 164 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.11.7.2024
5) தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின்செயல்முறைகள் ந.க.எண்.037584/சி3/இ1/2025 நாள்.18.06.2025
6) தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின்செயல்முறைகள் ந.க.எண்.13466/டி1/2025, நாள்.18.06.2025

-0-

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் செயல்முறைகளின் அடிப்படையில் கடந்த 2025-26 கல்வியாண்டிற்கான ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல்கள் சார்பாக வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டது. அதனை பின்பற்றி கடந்த ஆண்டு (2025-26) ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல்கள் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

2) அதேபோல 2026-27ஆம் கல்வியாண்டிற்கும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல் கலந்தாய்வினை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இக்கலந்தாய்வு கல்வி தகவல் மேலாண்மை முகமை (EMIS) இணையதள வாயிலாக நடைபெறும் எனவும், அதற்கான ஆயத்தப்பணிகளை மேற்கொள்ளவும், மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கும் அனைத்துவகை ஆசிரியர்களின் விண்ணப்பங்களை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்து கீழ்க்கண்ட அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறது.

- மேற்படி மாறுதல் கோரும் விண்ணப்பங்களை 15.06.2026 முதல் 22.06.2026 வரை 06.00 பிப வரை EMISல் இணையத்தில் பதிவேற்றம் மேற்கொள்ளலாம்.
- பார்வை-2ல் காணும் அரசாணையில் தற்போது பணியாற்றும் பள்ளியில் ஓராண்டு பணிநிறைவடைந்திருக்க வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் பொதுமாறுதல் கலந்தாய்வில் பங்குபெற விருப்பம் உள்ள அனைத்துவகை ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

3) ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் முறை

- ஒவ்வொரு ஆசிரியரும் மாறுதலுக்கான விண்ணப்பத்தினை விண்ணப்பிக்கும்போது EMIS இணையத்தில் தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Individual Login IDஐ பயன்படுத்தி EMIS மூலம் வெளியிடப்பட்டுள்ள மாறுதல் கோரும் படிவத்தில் உரிய விவரங்களை பதிவேற்றம் செய்திடல் வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும்போது ஏதேனும் விவரங்கள் தவறுதலாக இருப்பின் (பிறந்ததேதி, பணியில் சேர்ந்த நாள், ஆசிரியர் பெயர், பள்ளியின் பெயர் மற்றும் இதரவைகள்) அதிலிருந்து வெளியேறி தங்கள் பள்ளிக்கென உள்ள Login IDயில் Teacher Profile சென்று தவறாக உள்ள விவரங்களை சரிசெய்யப்பட்ட பின்னர் மீளவும் Individual Login IDஜக்கு சென்று அனைத்து விவரங்களையும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டவுடன் Submit செய்திடல் வேண்டும்.
- ஆசிரியரின் மாறுதல் விண்ணப்பத்தினை பெற்ற பள்ளியின் தலைமை ஆசிரியர் பள்ளி Login IDஐ பயன்படுத்தி மேற்படி மாறுதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியரின் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களை View செய்து அனைத்தும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என உறுதி (பணிப்பதிவேட்டுடன் ஒப்பிடுதல்) செய்த பின்னர் முதல் கட்டமாக பள்ளித் தலைமை ஆசிரியர் Approval செய்யப்படவேண்டும்.
- மேற்படி பள்ளித் தலைமை ஆசிரியர் மாறுதலுக்கு விண்ணப்பித்த சம்மந்தப்பட்ட ஆசிரியரது விண்ணப்பத்தினை Approval செய்யப்பட்ட பின்னர் அதனை மூன்று நகல்கள் எடுத்து ஒன்றினை சார்ந்த ஆசிரியருக்கு சார்பு செய்துவிட்டு மற்றொரு பிரதியினை சம்மந்தப்பட்ட (CEO) முதன்மைக் கல்வி அலுவலரிடம் ஒப்படைத்திடல் வேண்டும்.
- அரசு உயர்/மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் மாறுதல் விண்ணப்பத்தினை தலைமை ஆசிரியரால் ஒப்புதல் செய்யப்பட்ட பின்னர் இரண்டாம் கட்டமாக முதன்மைக் கல்வி அலுவலர் தங்களுக்கென ஒதுக்கீடு செய்ப்பட்ட Login IDஐ பயன்படுத்தி மேற்படி மாறுதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியரின் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களை View செய்து அனைத்தும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என உறுதி செய்த பின்னர் இரண்டாம் கட்டமாக முதன்மைக் கல்வி அலுவலர் 2nd Approval செய்யப்படவேண்டும்.

**<u>பொதுமாறுதல் கலந்தாய்வில் வழங்கப்படும் முன்னுரிமை Priority</u>**

1. முற்றிலும் கண்பார்வையற்றவர் 100 %
2. மாற்றுத்திறனாளிகள் (40% அதற்கு மேல் ஊனம் உள்ளவர்கள்) (கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள் உட்பட)
3. மனவளர்ச்சி குன்றிய / மாற்றுத்திறனாளி குழந்தை உள்ள பெற்றோர்
4. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை / டையாலிசிஸ் சிகிச்சை / இதய அறுவை சிகிச்சை / புற்றுநோயாளிகள் / மூளைகட்டியால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள்
5. இராணுவத்தில் பணிபுரிபவரின் கணவன் / மனைவி
6. விதவை / மனைவியை இழந்தவர் / 40 வயது கடந்த முதிர்கன்னியர் / சட்டப்பூர்வமாக விவாகரத்து பெற்ற பெண் ஆசிரியை
7. தற்போது பணிபுரியும் பள்ளியில் 5 ஆண்டுக்கு மேல் பணியாற்றுபவர்கள்
8. கணவன் / மனைவி பணி முன்னுரிமை (above 30km)
9. இதர பிரிவுகள்

- மாறுதல் கோரும் விண்ணப்பத்தில் முன்னுரிமை (Priority) கோரி விண்ணப்பிக்கும்போது அதற்கான உரிய அலுவலரால் (Competent authority) அளிக்கப்பட்ட ஆதாரத்தை (ஆவண நகல்) இணையத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
- தற்போது பணிபுரியும் பள்ளிக்கு மாறுதல் பெற்ற வகை (ஏற்கனவே பெற்ற மாறுதல் ஆணை இணைக்கப்படல் வேண்டும்) i) விருப்ப மாறுதல் ii) மனமொத்த மாறுதல் iii) நேரடி நியமனம் iv) பதவி உயர்வு v) நிருவாக மாறுதல் vi) அலகு மாறுதல் vii) பணிநிரவல் இவற்றில் எந்த வகை என்பதை உரிய ஆதாரத்துடன் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

**4) ஆசிரியர் பயிற்றுநர் BRTE & DC**

ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் விருப்ப மாறுதல் கோரி EMIS ல் மேற்காண் அறிவுரைகளின்படியே விண்ணப்பிக்கவேண்டும். இவர்கள் சார்பாக விண்ணப்பிக்கும் மாறுதல் விண்ணப்பங்களை சரிபார்த்து Approval சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரால் மேற்கொள்ளப்படவேண்டும்.

**5) அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாறுதல் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் முறை**

- ஒவ்வொரு தலைமை ஆசிரியரும் தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Individual Login IDஐ பயன்படுத்தி EMISல் வெளியிடப்பட்டுள்ள மாறுதல் கோரும் படிவத்தில் உரிய விவரங்களை பதிவேற்றம் செய்திடல் வேண்டும். அனைத்து விவரங்களையும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டவுடன் Submit செய்திடல் வேண்டும்.
- மாறுதலுக்கு விண்ணப்பித்த உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியருக்கு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலரும் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியருக்கு முதன்மைக் கல்வி அலுவலரும் (பணிப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு) தங்களுக்குரிய Login IDஐ பயன்படுத்தி சரிபார்த்து ஒப்புதல் (Approval) அளிக்கப்படவேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து தலைமை ஆசிரியர் கையொப்பமிட்டு அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எனில் மாவட்டக் கல்வி அலுவலரிடமும் / அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எனில் முதன்மைக் கல்வி அலுவலரிடம் ஒப்படைத்திடல் வேண்டும்.

**6) பொதுமாறுதல் சார்பாக முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கான அறிவுரைகள்**

- மேற்படி மாறுதலுக்கு விண்ணப்பித்த அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களை தலைமை ஆசிரியர் ஒப்புதல் (Approval) அளித்த பிறகு ஒரு பிரதியினை முதன்மைக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அதனை முதன்மைக் கல்வி அலுவலர்கள் சரிபார்க்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

- மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களின் விண்ணப்பங்களை / மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் ஒப்புதல் (Approval) அளிக்க தங்களுக்கென EMIS மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட் User Name and Pasword ஐ பயன்படுத்தி ஆசிரியர்களின் மாறுதல் சார்பான விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை சரிபார்த்து உறுதி செய்து ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

- மாறுதல் விண்ணப்ப படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முன்னுரிமை (Priority) அடிப்படையில் விண்ணப்பத்தில் காரணம் குறிப்பிடும்போது அதற்குரிய சான்றிதழ்கள் முதன்மைக் கல்வி அலுவலரால் சரிபார்த்திடல் வேண்டும்.

7) <u>பொதுவான அறிவுரைகள்</u>

- மேல்நிலைப் பிரிவில் உயிரியியல் பாடப்பிரிவில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள் பொதுமாறுதல் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யும்போது தாம் பயின்ற Main Subject (Major) குறிப்பிடப்படவேண்டும் மற்றும் எந்த பணியிடத்தில் (Post Details Zoology, Botony, Biology) பணிபுரிகிறார் என்ற விவரத்தினையும் குறிப்பிடப்படவேண்டும்.

- கணவன்-மனைவி (Spouse Priority) முன்னுரிமையில் மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் அவரவர்கள் பணிபுரியும் அலுவலகம் / பள்ளி அரசு மற்றும் அரசுத் துறையின் நிருவாகத்தின் கீழ் உள்ளதா என்ற விவரத்தினையும், அதற்கான உரிய அலுவலரிடம் (Competent authority) பெறப்பட்ட சான்றினையும் பதிவேற்றம் செய்யப்படவேண்டும். கணவன்-மனைவி பணிபுரியும் இடத்திற்கான தொலைவு 30கி.மீ மேல் உள்ளதை சரிபார்த்து உறுதி செய்யப்படவேண்டும். கணவன் பணிபுரியும் மாவட்டம் (அ) மனைவி பணிபுரியும் மாவட்டத்தை மட்டுமே தெரிவு செய்ய அனுமதிக்கப்படவேண்டும். வேறு மாவட்டங்களை தெரிவு செய்திட அனுமதிக்க இயலாது.

- உள்மாவட்டத்திற்கு மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்கள் தங்களுக்குரிய சுழற்சி (turn) வரும்போது அம்மாவட்டத்தில் தங்களுக்கு மாறுதல் பெற்றுக்கொள்ள விருப்பமுள்ள காலிப்பணியிடம் ஏதும் இல்லையெனில் Not Willing என தெரிவு செய்து கொள்ளலாம். பின்னர் உள்மாவட்டத்திற்கான கலந்தாய்வு முழுமையாக முடிவு பெற்ற பிறகு இறுதியாக மீதம் உள்ள (Resultant Vacancy) காலிப்பணியிடங்களில் மேற்காணுமாறு Not Willing தெரிவு செய்தவர்களுக்கு மீண்டும் ஒரு முறை உள்மாவட்டத்திற்குள் மாறுதல் பெற வாய்ப்பு அளிக்கும் வகையில் அவரவர்களின் முன்னுரிமைப்படி மீண்டும் ஒரு முறை (One More choice) காலிப்பணியிடங்களை விருப்பத் தேர்வு செய்ய அனுமதிக்கப்படுவர்.

- மாவட்டம் விட்டு மாவட்டம் (Inter district transfer) கோரி விண்ணப்பித்துள்ள ஆசிரியர்கள் கலந்தாய்வின் போது தற்போது பணிபுரியும் மாவட்டத்தினை தவிர்த்து பிற மாவட்டத்தில் உள்ள காலிப்பணியிடத்தினையே தெரிவு செய்யப்படவேண்டும். (தனியரின் தற்போது பணிபுரியும் மாவட்டம் EMIS இணையத்தில் காண்பிக்கப்படமாட்டாது)

- மேலும் மாறுதலுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் உள்மாவட்டம் / மாவட்டம் விட்டு மாவட்டம் ஆகிய இரு கலந்தாய்விற்கும் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்கள் உள்மாவட்டத்திற்குள் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொண்டு மாறுதல் ஆணை பெற்றவர்கள் மாவட்டம் விட்டு மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது.

- மனமொத்த மாறுதல்கள் (Mutual Transfer) சார்பான விண்ணப்பங்கள், பொதுமாறுதல் கலந்தாய்வு முடிந்த பின்னர் விண்ணப்பிப்பது சார்ந்து அறிவுரைகள் பின்னர் வழங்கப்படும்.

- மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களின் விண்ணப்பங்களில் தவறுகள் ஏதும் பின்னர் கண்டறியப்படின் தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- **கலந்தாய்வு நடைபெறும் நாளில் மாற்றுப்பணி அனுமதிக்க இயலாது எனவும், தற்செயல் விடுப்பு அளித்துவிட்டு கலந்தாய்வில் பங்கேற்க வேண்டும் என்று தெரிவிக்கலாகிறது.**

- மாறுதல் கலந்தாய்வுக்கு விண்ணப்பித்து கலந்தாய்வு நடைபெறும் அன்றைய நாளில் வருகைபுரியாமலோ (Absent & Late) தாமதமாக வருகைபுரிந்தாலோ கலந்தாய்வில் கலந்து கொள்ள இயலாது.

- மேலும் இணைப்பில் காணும் காலஅட்டவணையில் தெரிவித்துள்ளவாறு மாறுதல் கோரி விண்ணப்பிக்கப்பட்ட ஆசிரியர்களின் முன்னுரிமைப் பட்டியல் உரிய தேதியில் வெளியிடப்படும். அப்பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் ஏதும் இருப்பின் அதனை EMIS Online வழியே உரிய விவரங்களை தெரிவித்திடவும், இதனை முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் அலுவலகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட EMIS Login IDஐ பயன்படுத்தி மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களின் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திடவும் உரிய முறையீடுகள், திருத்தங்கள் இருப்பின் அதனை சரிசெய்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

- மேற்படி திருத்தங்கள் / முறையீடுகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு இறுதி முன்னுரிமைப் பட்டியல் (Final Seniority List) வெளியிடப்பட்ட பிறகு திருத்தங்கள் / முறையீடுகள் ஏதும் இருப்பின் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பார்வை-1ல் காணும் அரசாணைக்கு திருத்தம் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.164 பள்ளிக் கல்வி (பக5(1) துறை நாள்.11.7.2024ன்படி கடந்த ஓராண்டிற்குள் (1.6.2025 to 31.5.2026) ஆசிரியரின் கணவரோ (அ) மனைவியோ விபத்து மற்றும் இதர காரணங்களால் திடீரென மரணம் அடைந்து இருப்பின் எந்தவித முன்னுரிமையும் பின்பற்றாமல் கலந்தாய்வுக்கு முன்னரே அவர்கள் கோரும் காலிப்பணியிடத்திற்கு மாறுதல் வழங்கப்படவேண்டும்.

- புகாருக்கு உள்ளாகி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒரு பள்ளியில் இருந்து வேறு பள்ளிக்கு நிர்வாக மாறுதல் செய்யப்பட்டவர்கள் மீண்டும் அதே பள்ளியை கலந்தாய்வில் தெரிவு செய்திட அனுமதித்தல் கூடாது. மேலும் போக்சோ வழக்குகளில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வேறு மாவட்டத்திற்கு நிர்வாக மாறுதல் செய்யப்பட்டவர்கள் மீண்டும் ஏற்கனவே பணிபுரிந்த அதே மாவட்டத்தினை தெரிவு செய்ய அனுமதித்தல் கூடாது. இதனை முதன்மைக் கல்வி அலுவலர்கள் கண்காணித்து செயல்பட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- **கலந்தாய்வு:-** அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு பதவி வாரியாக கால அட்டவணையில் குறிப்பிட்டவாறு முதன்மைக் கல்வி அலுவலர்களின் EMIS Login மூலமாகவே நடத்தப்படும்.

## <u>தொடக்கக் கல்வி இயக்ககம்</u>

1. **தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள்/ தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்/ பட்டதாரி ஆசிரியர்கள் / நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பொது மாறுதல் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் முறை:**

- ஒவ்வொரு ஆசிரியரும் மாறுதலுக்கான விண்ணப்பத்தினை விண்ணப்பிக்கும்போது EMIS இணையத்தில் தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Individual Login ID ஐ பயன்படுத்தி EMIS வெளியிடப்பட்டுள்ள மாறுதல் கோரும் படிவத்தில் உரிய விவரங்களை பதிவேற்றம் செய்திடல் வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும்போது ஏதேனும் ஆசிரியர் சார்பான விவரங்கள் தவறுதலாக இருப்பின் (பிறந்த தேதி, பணியில் சேர்ந்த நாள், ஆசிரியரின் பெயர், பள்ளியின் பெயர் மற்றும் இதரவைகள்) அதிலிருந்து வெளியேறி தங்கள் பள்ளிக்கென உள்ள Login IDயில் Teacher Profile சென்று தவறாக உள்ள விவரங்களை சரிசெய்யப்பட்ட பின்னர் மீளவும் தங்களுடைய Individual Login ID யில் சென்று அனைத்து விவரங்களையும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டவுடன் Submit செய்திடல் வேண்டும்.

2. **பொது மாறுதல் சார்பாக வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கான அறிவுரைகள்:**

- ❖ ஆசிரியரின் மாறுதல் கோரும் விண்ணப்பத்தினை பெற்ற தொடர்புடைய வட்டாரக் கல்வி அலுவலர்கள் பள்ளி Login IDஐ பயன்படுத்தி மேற்படி மாறதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியரின் விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்டவற்றினை View செய்து அனைத்தும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என உறுதி (பணிப்பதிவேட்டுடன் ஒப்பிடுதல்) செய்த பின்னர் முதல் கட்டமாக வட்டாரக் கல்வி அலுவலர்Approval செய்யப்பட வேண்டும்.
- ❖ மேற்படி வட்டாரக் கல்வி அலுவலர் மாறுதலுக்கு விண்ணப்பித்த சம்மந்தப்பட்ட ஆசிரியர்களின் விண்ணப்பத்தினை Approval செய்யப்பட்ட பின்னர் அதனை மூன்று நகல்கள் எடுத்து ஒன்றினை சார்ந்த ஆசிரியருக்கு சார்பு செய்துவிட்டு மற்றொரு பிரதியனை சம்பந்தப்பட்ட (DEO) மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலரிடம் ஒப்படைத்திடல் வேண்டும்.
- ❖ ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விண்ணப்பத்தினை வட்டாரக் கல்வி அலுவலரால் ஒப்புதல் செய்யப்பட்ட பின்னர் இரண்டாம் கட்டமாக மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Login IDஐ பயன்படுத்தி மேற்படி மாறுதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியரின் பூர்த்தி செய்யப்பட்ட விவரங்களை View செய்து அனைத்தும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என உறுதி செய்த பின்னர் இரண்டாம் கட்டமாக மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) 2$^{nd}$ Approval செய்யப்பட வேண்டும்.
- ❖ மாறுதல் கோரும் விண்ணப்பத்தில் முன்னுரிமை (Priority) கோரி விண்ணப்பிக்கும்போது அதற்கான உரிய அலுவலரால் அளிக்கப்பட்ட ஆதாரத்தை (ஆவண நகல்) இணையத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
- ❖ தற்போது பணிபுரியும் பள்ளியில் மாறுதல் பெற்ற வகையில் (ஏற்கனவே பெற்ற மாறுதல் ஆணை இணைக்கப்படல் வேண்டும்) i) விருப்ப மாறுதல் ii) மனமொத்த மாறுதல் iii) நேரடி நியமனம் iv) பதவி உயர்வு v) நிர்வாக மாறுதல் vi) அலகு மாறுதல் vii) பணி நிரவல் இவற்றில் எந்த வகை என்பதை உரிய ஆதாரத்துடன் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

3. **பொது மாறுதல் சார்பாக மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலர்களுக்கான அறிவுரைகள்:**

- ❖ மேற்படி மாறுதலுக்கு விண்ணப்பித்த ஊராட்சி ஒன்றிய தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களை வட்டாரக் கல்வி அலுவலர் ஒப்புதல் (Approval) அளித்த பிறகு ஒரு பிரதியினை மாவட்டக் கல்வி அலுவலரிடம் (தொடக்கக் கல்வி) ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

- மாறுதல் கோரி விண்ணப்பத்த ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களின் விண்ணப்பங்களை வட்டாரக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) ஒப்புதல் அளிக்க தங்களுக்கென EMIS மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட User Name and Password ஐ பயன்படுத்தி ஆசிரியர்களின் மாறுதல் சார்பான விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை சரிபார்த்து உறுதி செய்து ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

- மாறுதல் விண்ணப்ப படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முன்னுரிமை (Priority) அடிப்படையில் விண்ணப்பத்தில் காரணம் குறிப்பிடும்போது அதற்குரிய சான்றிதழ்கள் மாவட்டக் கல்வி அலுவலரால் (தொடக்கக் கல்வி) சரிபார்த்திடல் வேண்டும்.

- கலந்தாய்விற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் (கணினி, மின்இணைப்பு, இணையதளம், இருக்கை வசதி போன்ற இதர வசதிகளை) மேற்கொள்ளப்படவேண்டும். கலந்தாய்வுகள் நடைபெறும் அன்றைய நாளில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் கலந்தாய்வினை சிறப்பாக நல்லமுறையில் நடத்திட அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறது. மேற்காண் விவரங்களை தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளுக்கு / வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு சுற்றறிக்கையின் வாயிலாக தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக் கல்வி) தெரிவிக்கலாகிறது.

இணைப்பு: பொதுமாறுதல் காலஅட்டவணை
(பள்ளிக் கல்வி & தொடக்கக் கல்வி)

தொடக்கக் கல்வி இயக்குநர்

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் &
மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) (மின்னஞ்சல் மூலமாக)
இச்சுற்றறிக்கையின் நகலினை (DEO (Sec.) & BEO's தகவல் அளிக்கவும்)

நகல்:
1 இணை இயக்குநர் ( பணியாளர் தொகுதி & மேல்நிலைக் கல்வி )
2 EMIS ஒருங்கிணைப்பாளர், மாநில திட்ட இயக்ககம் சென்னை-6
3 சம்மந்தப்பட்ட பிரிவுகள் (W1, W2, W3, C1, C2, C3, C4, C5, V1)

பள்ளிக் கல்வி இயக்ககம்

## 2026–27ம் கல்வியாண்டிற்கு பணிநிரவல் மற்றும் பொது மாறுதல் கலந்தாய்வு

உத்தேச கலந்தாய்வு கால அட்டவணை (பள்ளிக் கல்வி)

கலந்தாய்வு நடைபெறும் நேரம் : முற்பகல் 09.30 முதல் பிற்பகல் 06.00 வரை

| வ. எண் | இயக்ககம் | பதவி | கலந்தாய்வு நடைபெறும் நாள் & கிழமை |
|---|---|---|---|
| 1 | DSE | பொது மாறுதலுக்கான விண்ணப்பங்களைத் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்கள் கல்வி மேலாண்மை தகவல் முகமை (EMIS) வாயிலாகப் பதிவேற்றம் செய்தல் | 15.06.2026 முதல் 22.06.2026 |
| 2 | DSE | பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல் கோரும் விண்ணப்பங்களை மு.க.அ.கள் ஒப்புதல் அளித்தல் வேண்டும் | 23.06.2026 முதல் 24.06.2026 |
| 3 | DSE | பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல் கோரும் விண்ணப்பங்களின் முன்னுரிமைப் பட்டியல் (Seniority List) மற்றும் காலிப்பணியிட விவரங்கள் (Vacancy List) வெளியிடுதல் | 25.06.2026 |
| 4 | DSE | முன்னுரிமைப் பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் ஏதும் இருப்பின் (Claims and objections) | 26.06.2026 முதல் 27.06.2026 |
| 5 | DSE | மாறுதல் விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல்(Release off seniority list) Release of Vacancy List Final) | 30.06.2026 |
| 6 | DSE | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 01.07.2026 புதன் |
| 7 | DSE | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 02.07.2026 வியாழன் |
| 8 | DSE | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வு | 03.07.2026 வெள்ளி |
| 9 | DSE | அரசு/நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 04.07.2026 சனி |
| 10 | DSE | அரசு/நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 06.07.2026 திங்கள் |
| 11 | DSE | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள் 01.08.2025 நிலவரப்படி ஆசிரியருடன் உபரி எனக் கண்டறியப்பட்டவர்களை பணிநிரவல் (PG Deployment All subjects) | 07.07.2026 செவ்வாய் |
| 12 | DSE | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர் நிலை–1 அரசாணை எண்.78 ப.க.து. நாள். 12.03.2026ன்படி உபரியாக உள்ள உ.க.இ. நிலை–1 ஆசிரியர்களை பணிநிரவல் செய்தல் Phy.Director Gr.I Deployment as per New GO | 08.07.2026 புதன் |

| வ. எண் | இயக்ககம் | பதவி | கலந்தாய்வு நடைபெறும் நாள் & கிழமை |
|---|---|---|---|
| 13 | DSE | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை–1 /உடற்கல்வி இயக்குநர் நிலை–1 / தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 09.07.2026 வியாழன் |
| 14 | DSE | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை–1 / உடற்கல்வி இயக்குநர் நிலை–1 / தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 10.07.2026 வெள்ளி முதல் 15.07.2026 புதன் |
| 15 | DSE | அரசு/நகராட்சிப் உயர்/மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் 01.08.2025 நிலவரப்படி ஆசிரியருடன் உபரி எனக் கண்டறியப்பட்டவர்களை பணிநிரவல் (BT Deployment–Tamil, English, Maths,Science, Social) வருவாய் மாவட்டத்திற்குள் | 16.07.2026 வியாழன் |
| 16 | DSE | அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர் நிலை–2 மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் அரசாணை எண்.78 ப.க.து. நாள். 12.03.2026ன்படி உபரியாக உள்ள உ.க.இ. நிலை–2 மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களை பணிநிரவல் செய்தல் **Phy.Director Gr.II & PET Deployment** | 17.07.2026 வெள்ளி |
| 17 | DSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை–2 மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 18.07.2026 சனி |
| 18 | DSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை–2 மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 20.07.2026 திங்கள் |
| 19 | DSE | வட்டார வளமையத்தில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்கள் BRTE & DC (வருவாய் மாவட்டத்திற்குள்) | 21.07.2026 செவ்வாய் |
| 20 | DSE | வட்டார வளமையத்தில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்கள் BRTE & DC (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 22.07.2026 புதன் |
| 21 | DSE | அரசு/நகராட்சிப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 23.07.2026 வியாழன் |
| 22 | DSE | அரசு/நகராட்சிப் பள்ளிப் பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 24.07.2026 வெள்ளி முதல் 30.7.2026 |

பள்ளிக் கல்வி இயக்குநர்

# தொடக்கக் கல்வி இயக்ககம்

## 2026–27ம் கல்வியாண்டிற்கு பணி நிரவல் மற்றும் பொது மாறுதல் கலந்தாய்விற்கான உத்தேச கால அட்டவணை

**கலந்தாய்வு நடைபெறும் நேரம்: முற்பகல் 09.30 முதல் பிற்பகல் 06.00 வரை**

| வ. எண் | இயக்ககம் | பதவி | கலந்தாய்வு நடைபெறும் நாள் கிழமை |
|---|---|---|---|
| 1. | DEE | மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் EMIS இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டிய நாட்கள் | 15.06.2026 முதல் 22.06.2026 வரை |
| 2. | DEE | மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களின் விண்ணப்பங்களை வட்டாரக் கல்வி அலுவலர்கள் ஒப்புதல் அளித்தல் | 15.06.2026 முதல் 22.06.2026 வரை |
| 3. | DEE | மாறுதல் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்களின் விண்ணப்பங்களை மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலர்கள் ஒப்புதல் அளித்தல் | 23.06.2026 முதல் 24.06.2026 |
| 4. | DEE | பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல் கோரும் விண்ணப்பங்களின் முன்னுரிமைப் பட்டியல் (Seniority List) வெளியிடுதல் | 25.06.2026 வியாழன்கிழமை காலை 10 மணிக்கு |
| 5. | DEE | முன்னுரிமைப் பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் ஏதும் இருப்பின் (Claims and objections) அத்துடன் காலிப்பணியிட விவரங்கள் மாவட்டக் கல்வி அலுவலரால் பதிவேற்றம் செய்தல் (Vacancy upload) | 27.06.2026 சனிக்கிழமை |
| 6. | DEE | மாறுதல் விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் (Release of seniority list) மற்றும் காலிப்பணியிட (Release of Vacancy List) விவரங்கள் வெளியிடுதல் அத்துடன் மலை சுழற்சி கலந்தாய்வு மாவட்டங்களில் மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலர் அவ்வாசிரியரின் பெயர்களை பதிவேற்றம் செய்தல்) | 29.06.2026 திங்கள் கிழமை |
| 7. | DEE | மலைச் சுழற்சி மாறுதல் கலந்தாய்வு (21 ஒன்றியங்களுக்கு மட்டும்) | 01.07.2026 புதன் கிழமை |
| 8. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் பணிநிரவல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள்) | 02.07.2026 வியாழன் கிழமை முற்பகல் |
| 9. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் பணிநிரவல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 02.07.2026 வியாழன் கிழமை பிற்பகல் |
| 10. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 03.07.2026 வெள்ளிக்கிழமை முற்பகல் |

| | | | |
|---|---|---|---|
| 11. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 03.07.2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் |
| 12. | DEE | இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 04.07.2026, 06.07.2026 மற்றும் 07.07.2026 |
| 13. | DEE | தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 08.07.2026 புதன்கிழமை முற்பகல் |
| 14. | DEE | தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 08.07.2026 புதன்கிழமை பிற்பகல் |
| 15. | DEE | தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 09.07.2026 வியாழன்கிழமை |
| 16. | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 10.07.2026 வெள்ளிக்கிழமை முற்பகல் |
| 17. | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 10.07.2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் |
| 18. | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 11.07.2026, 13.07.2026 மற்றும் 14.07.2026 |
| 19. | DEE | நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 15.07.2026 புதன்கிழமை முற்பகல் |
| 20. | DEE | நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 15.07.2026 புதன்கிழமை பிற்பகல் |
| 21. | DEE | நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 16.07.2026 (வியாழன்கிழமை) |

தொடக்கக் கல்வி இயக்குநர்